**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No. 42/2019**

பெயர் : ராசாத்தி (PW1) கிராமம் :

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

நாள் : 06.02.2025

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வா.சா.ஆ.4 ஆக குறிப்பிட்டுள்ள ஆவணம் எண்.574/1999 ஆவணத்திற்கும், எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. (இவ்வழக்கில் நான் தாக்கல் செய்த ஆவண எண்.577/1999 ஆகும். நீதிமன்ற முதல் விசாரணையில் மேற்படி ஆவண எண்.574/1999 ஆக தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது.)

2. எனக்கு எழுத, படிக்க தெரியாது. என்னிடம் காட்டப்படும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கையெழுத்தை படம் வரைவதுபோல் வரைந்து பழகியுள்ளேன்.

3. பிராதில் குறிப்பிட்டுள்ள விபரங்களை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர்தான் படித்து பார்ப்பார்.

4. எனது கணவர் இறந்தபிறகு திருத்தப்பட்ட பிராதினை எனக்கு படித்து காட்டினார்களா என்றால் எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். அதில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் நான் கூறியதன் அடிப்படையில்தான் திருத்தம் செய்யப்பட்டது.

5. நான் வழக்கு சங்கதிகளை தெரிந்துகொண்டு வழக்கிற்காக எந்த விபரங்களும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் என் பெயரிலும், எனது கணவர் பெயரிலும் பதிவு செய்யப்பட்ட 4 கிரைய ஆவணங்களிலும் ரூ.87,200/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி 4 ஆவணங்களின் கூட்டு மதிப்பு ரூ.3,48,800/- என்றால் சரிதான்.

7. சொத்துக்களின் சந்தை மதிப்பு தெரியாத பட்சத்தில்தான் சொத்திற்கான தீர்வை வைத்து மதிப்பீடு கணக்கீடு செய்ய வேண்டும் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. ரூ.3,48,800/- மதிப்புள்ள சொத்தை ரூ.202.80/-பைசா மதிப்புள்ள சொத்து என்று மோசடியாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. ரூ.3,48,800/- மதிப்புள்ள தாவா சொத்து குறித்த வழக்கை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல.

10. கடலாடி துணை வட்டாட்சியர் அவர்களிடம் நான் அளித்த மனுவின் பேரில் நடைபெற்ற விசாரணையில் 1ம் பிரதிவாதி தரப்பிலும் மனு கொடுக்கப்பட்டு இருதரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு முடிவில் எனது பெயருக்கு புல எண்.192/9 ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11. 1ம் பிரதிவாதி பரமக்குடி வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்து அதில் எனக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. மேற்படி உத்தரவின் நகல் எனக்கு சார்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனடிப்படையில் 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரைய ஆவணம் 2002ம் ஆண்டிலேயே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

நான் தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. மேற்படி ரத்து உத்தரவை எதிர்த்து நான் எனது தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து நான் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது கணவருக்குதான் தெரியும். அந்த உத்தரவிற்கு பின்பே அ.வ.எண்.89/2003 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14. 1ம் பிரதிவாதி பெயரில் 1994ம் ஆண்டிலேயே கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15. தாவா சொத்தைப் பொறுத்து எனது பெயரில் ஏற்பட்ட ஆவணங்கள் 2வது ஆவணங்கள் என்றால் சரியல்ல.

16. நான் விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

17. நான் தாக்கல் செய்த 83/2003 (முதுகுளத்தூர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட பிறகு 83/2004) நீதிமன்ற அனுமதியுடன் திரும்ப பெற்றுக்கொண்டு 12 வருடங்களுக்கு பின் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

18. இவ்வழக்கிற்கான வழக்கு மூலமாக 06.08.2003 முதல் என்று குறிப்பிட்டுள்ள விபரமானது பரமக்குடி சார் ஆட்சியரால் தாவா சொத்தைப் பொறுத்து பட்டா தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் தேதி என்றால் சரியல்ல. நான் மேற்படி விபரங்களை தெரிந்து கொண்டு வழக்கிற்காக

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19. அண்ணாசாமி பாண்டியனிடமிருந்து 14.09.1999 ம் தேதியன்று 1 ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற நிலையில் அதே சொத்தைப் பொறுத்து அண்ணாசாமி பாண்டியனின் பவர் ஏஜென்டான தங்கராஜா மூலம் நாங்கள் 1999 ம் ஆண்டு கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் அடிப்படையில் அனுபவ பாத்தியமோ, உரிமையோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

20. தங்கராஜா செல்லாத பவர்பத்திரத்தின் அடிப்படையில் பதிவு செய்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

21. எனது கணவருக்கு சட்டப்படி உரிமை இல்லாத சொத்தைப் பொறுத்து அவர் எழுதி வைத்ததாக நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

22. மேற்படி உயில் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள புல எண்.192/2 என்றால் சரிதான். உயிலில் குறிப்பிட்டுள்ள புல எண்ணிற்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. நான் தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

23. வழக்கு தாக்கல் செய்யும்போது தாவா சொத்தின் தீர்வை ரூ.6.76 என்பதைக்காட்ட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. தீர்வை சம்மந்தமான ஆவணங்கள் என்னிடம் இல்லை என்பதால்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

24. நான் தீர்வு தொகையை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதைக்காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல.

25. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா 1ம் பிரதிவாதியின் பெயரில் தாக்கலாகி வருவதாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதிகள் தரப்பில் பல போலி பத்திரத்தில் ஏற்பட்டுள்ளதால் யாருடைய பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது.

26. 1ம் பிரதிவாதி பெயரில் போலியாக ஆவணம் ஏற்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் விதமாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

27. மேற்படி ஆவணம் பதிவுத்துறை விதிகளின் விதிகளின் படி ஏற்படுத்தப்பட்டது என்பதால் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது என்பதால்தான் அதுபற்றி வில்லங்கச்சான்று ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

28. சிவஞானபாண்டியன் தாவா சொத்தில் தனக்கு பங்குள்ளதாக அவரை தரப்பினராக சேர்க்க மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீங்கள் இருவரும் சேர்ந்து எங்களை கூட்டாக ஏமாற்ற வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

29. அந்த இடைமனுவில் எனது தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், சிவஞானபாண்டியனும் கூட்டாக இருப்பதால்தான் அந்த மனுவில் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

30. அ.வ.எண்.89/2004ன் நான்குமாலும் தாவா சொத்தின் நான்குமாலும் வேறுபட்டவை என்றால் எனக்கு தெரியாது. நான் தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

31. இராஜேந்திரன் பெயரில் எந்த பட்டாவும் தாக்கலாகவில்லை

என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

32. 1ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணங்கள் எனது கிரைய ஆவணத்திற்கு முன்னதாக ஏற்பட்டது என்பதால் எனது ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)